**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | STC No.1304/2018 |
| Deposition Of Witness for | Prosecution PW4<br>Defense<br>Court |
| Name | **திரு.சுடலை ஆண்டி** |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

*1 வது மற்றும் 3 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of October 2024.

நான் மேலஅரியகுளத்தில் வசித்து வருகிறேன். இரும்பு பட்டறை நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து **அ.சா.ஆ.2** ஆகும். கடந்த 09.06.2017 ம் தேதி 02.00 மணியளவில் அ.சா.1 ற்கும் 1 ம் எதிரிக்கும் நடைபெற்ற பிரச்சனை குறித்து உதவி ஆய்வாளர் வந்து சம்பவ இடம் எங்கே என்று கேட்டார், அங்கு சம்பவ இடத்தில் வைத்து வரைபடம் வரைந்தார்கள். என்னுடன் நயினார் ஆசாரி கையெழுத்து செய்தார். வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 என் உடன் பிறந்த சகோதரர் என்று சொன்னால் சரிதான். எனது மகன் பெயர் செந்தில் குமார். எனது மகன் செந்தில் குமாரும் அ.சா.1 ம் சேர்ந்து தான் மூலைக்கரைபட்டியில் நகை கடை வைத்துள்ளார் என்று சொன்னால் என் மகன் சொந்த செலவில் வைத்துள்ளார். சம்பவ இடமானது அம்மன் கோவில் கீழ்த்தெரு, எனது வீடு அம்மன் கோவில் மேலத்தெருவில் உள்ளது. நான் வேலை செய்யும்

இடமும், அ.சா.1 வீடும் ஒரே இடத்தில் இருந்தது. போலீசார் அங்கு வந்து விசாரணை செய்தார்கள்.

சம்பவம் நடந்த இடம் அ.சா.1 வீடு என்று அடையாளம் காட்டினேன் என்று சொன்னால் சரிதான். தகர செட்டு அருகில் வைத்து தான் போலீசார் எழுதினார்கள். சம்பவம் நடந்த அன்று முதல் 4 நாட்கள் கழித்து சுடலை கோவில் திருவிழா நடந்தது. சம்பவம் நடந்த பிறகு போலீசார் அ.சா.1யை விசாரணைக்கு அழைத்தார்கள். நான் சொல்வது போல வரைபடம் எதுவும் என் முன்னிலையில் தயார் செய்யவில்லை. அ.சா.1 எனது உடன் பிறந்த சகோதரர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | STC No.1304/2018 |
| Deposition Of Witness for | Prosecution PW3<br>Defense<br>Court |
| Name | திரு.துரை |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

*1 வது மற்றும் 3 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of October 2024.

நான் மேலஅரியகுளத்தில் வசித்து வருகிறேன். தச்சு வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது சித்தப்பா. எதிரிகள் என் உறவினர்கள். தேதி ஞாபகம் இல்லை. ஜுன் மாதம் 2017 ம் வருடம் காலை சுமார் 10.00 அல்லது 10.30 மணியளவில் 1ம் எதிரியின் வீட்டிற்கு முன்பு பந்தல்போட்டு கொண்டு இருந்தார்கள். பாகம் பிாிக்காத காரணத்தினால் எப்படி பந்தல் போடலாம் என்று அ.சா.1 மற்றும் ராமசுப்பிரமணியனும் 1ம் எதிரியை அடித்தார். நான் பக்கத்து வீடு என்பதால் பார்த்த போது 1ம் எதிரி கீழே இருந்தார். அ.சா.1 மற்றும் ராமசுப்பிரமணியனும் 1ம் எதிரியை அவதூறான வார்த்தைகளால் பேசி பந்தல்களை புடுங்கிவிட்டார்கள். சம்பவத்தின் போது பந்தல்காரர் நடராஜன், கசமுத்து மற்றும் நான் 1ம் எதிரியை தூக்கிவிட்டோம்.

அ.சா.1, 1ம் எதிரியை வெட்டாமல் விடமாட்டேன் என்று அரிவாள் எடுத்து கொண்டு வந்தார். போலீசார் வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு**

**தரப்பில் குறுக்கு விசாரணை)**

07.06.2017 காலை 10.30 மணியளவில் 1வது எதிரி வீட்டிற்கு முன்பாக ஓலை பந்தல் போடும் போது எதிரிகள் அ.சா.1யை அவதூறான வார்த்தைகளால் பேசி காலால் மிதித்து காயம் ஏற்படுத்தியதாகவும், கொன்றுவிடுவேன் என்று மிரட்டி மரண பயம் ஏற்படுத்தியதாகவும், மேற்படி சம்பவத்தை நான் நேரடியாக பார்த்ததாக போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு எதிரிகள் உறவினர்கள் என்பதால் உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | STC No.1304/2018 |
| Deposition Of Witness for | Prosecution PW2<br>Defense<br>Court |
| Name | **திரு.பழனி ஆசாரி** |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

*1 வது மற்றும் 3 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of October 2024.

நான் மேலஅரியகுளத்தில் வசித்து வருகிறேன். தச்சு வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது மாப்பிள்ளை. எதிரிகள் என் உறவினர்கள். கடந்த 07.06.2017 ம் தேதி அ.சா.1 வீட்டிற்கு முன்பாக சீட் போட்டு கொண்டு இருந்த போது எதிரிகள் அங்கு வந்து சீட் போடகூடாது என்று தடுத்தார்கள். அப்போது நான் மேலே சீட்டு போட்டு கொண்டு இருந்தேன். சீட் போடகூடாது என்று தள்ளு முள்ளின் போது 1ம் எதிரிக்கு காயம் ஏற்பட்டது. சம்பவம் நடக்கும் போது காலை 10.30 மணி இருக்கும். சம்பவம் நடக்கும் போது துரை இருந்தார். சம்பவம் இடத்திற்கு நான் கூலிங் சீட் போடுவதற்காக சென்றேன். கூலிங் சீட் போட்டு கொண்டு இருந்தேன். போலீசார் அன்றைய தினம் என்னை விசாரித்தார்கள்.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

07.06.2017 காலை 10.30 மணியளவில் 1வது எதிரி வீட்டிற்கு முன்பாக ஓலை

பந்தல் போடும் போது எதிரிகள் அ.சா.1யை அவதூறான வார்த்தைகளால் பேசி காலால் மிதித்து காயம் ஏற்படுத்தியதாகவும், கொன்றுவிடுவேன் என்று மிரட்டி மரண பயம் ஏற்படுத்தியதாகவும், மேற்படி சம்பவத்தை நான் நேரடியாக பார்த்ததாக போலீஸ் விசாரணையில் கூறிவிட்டு எதிரிகள் உறவினர்கள் என்பதால் உண்மைக்கு மாறாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | STC No.1304/2018 |
| Deposition Of Witness for | Prosecution PW1<br>Defense<br>Court |
| Name | **திரு.சேர்மவேல்** |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

*1 வது மற்றும் 3 வது எதிரி ஆஜர். 2 வது எதிரி ஆஜரில்லை குவிமுச பிரிவு 317 ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.*

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of October 2024.

நான் மேலஅரியகுளத்தில் வசித்து வருகிறேன். கொல்பட்டறை நடத்தி வருகிறேன். எதிரிகள் எனது உறவினர்கள். எனது தந்தை மற்றும் என் தந்தையுடன் பிறந்தவர்களுடன் சொத்துகளை சரிபாதியாக பிரித்து நடைபாதை நிர்ணயித்து ஏற்கனவே 2017 ம் ஆண்டு முடிக்கபட்டு இருந்தது. என் தந்தைக்கு பிறகு எனக்கு பாத்தியபட்ட பகுதியில் மே மாதம் 2017 ம் ஆண்டு எனது வீட்டிற்கு வெயில் வருவதால் ஆஸ்பெஸ்டாஸ் சீட் போட முயற்சி செய்த போது எதிரிகள் பொது பாதையில் சீட்டு போடுவதாக போலீசில் புகார் கொடுத்தார்கள். இது சம்பந்தமாக போலீசார் விசாரணை செய்து சா'வேயர் மூலமாக அளந்து முடிவெடுக்க அறிவுறுத்தபட்டது.

பின்னர் 07.06.2017 தேதி எதிரி சங்கர் ஆச்சாரி அவர் வீட்டிற்கு முன்பு பந்தல் போட காலை சுமார் 10.30 மணியளவில் முயற்சித்தார்கள். நான் சீட்டு போடும் போது தடுத்து போலீசார் சர்வேயர் வைத்து அளந்த பிறகு தான் முடிவெடுக்க வேண்டும் என்று அறிவுறுத்திய நிலையில் நீங்கள் மட்டும் எப்படி போடலாம் என்று கேட்டேன்.

அப்போது 1ம் எதிரி மற்றும் 3ம் எதிரி என்னை பார்த்து புண்டாமகனை தேவிடியா மகனே என்று பேசி என்னை காலால் நெஞ்சில் உதைத்துகீழே தள்ளிவிட்டார்கள். 1ம் எதிரியின் மற்றொரு மகனான சுதாகர் காலால் என் வயிற்றில் எட்டி மிதித்தார். மேற்படி சம்பவத்தை சம்பவம் நடக்கும் போது வெள்ளையா ஆசாரி, துரை ஆசாரி, பழனி ஆசாரி பார்த்து சண்டையை விளக்கிவிட்டார்கள். அப்போது 3வது எதிரி என்னை பார்த்து இன்று தப்பித்துவிட்டாய் உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று கூறினார்.

நான் பிறகு நான்குநேரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்தேன். எனக்கு அங்கு வலி சரியாகவில்லை. என் அண்ணன் மகன் செந்தில் மூலமாக காரில் திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றேன். இவ்வழக்கு சம்பந்தமாக எனது அண்ணன் மகன் செந்தில் தான் புகார் அளித்தார். என்னிடம் காட்டபடும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான், அதை நான் திருநெல்வேலி அரசு பொது மருததுவமனையில் சிகிச்சை பெறும் போது போட்டு கொடுத்தேன், அந்த புகார் வாக்குமூலம் **அ.சா.1** ஆக குறியீடு செய்யபடுகிறது. மேற்படி கையெழுத்தை போலீசார் சம்பவத்தை குறித்து என்னிடம் விசாரித்து வாங்கினார்கள். போலீசார் வழக்கு சம்பந்தமாக விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

மூலைக்கரைபட்டி பஜாரில் முத்து ஜுவல்லரி கடை எனக்கோ என் குடும்பத்தாருக்கோ பாத்தியபட்டது கிடையாது. என் அண்ணன் மகனுக்கு உடையது. நான் புகார் கொடுப்பதற்கு முன்பாக வழக்கு சம்பவம் தினத்தன்று 1ம் எதிரி கொடுத்த புகாரின் பேரில் மூலைக்கரைபட்டி காவல்நிலைய குற்ற எண்.74/2017 என்ற வழக்கு என் மீதும் என் தம்பி ராமசுப்பிரமணியன் மீதும் வழக்கு பதிவு செய்யபட்டது என்றால் சரிதான். நான் நான்குநேரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்ற போது தகராறில் தான் காயம் ஏற்பட்டதாக மருத்துவரிடம் தெரிவித்தேன் என்றால் சரிதான். மருத்துவர் காயம் எப்படி ஏற்பட்டது என்று கேட்டார் என்றால் சரிதான்.

நான் நான்குநேரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்ற போது எதிரிகள் அங்கு இருந்தார்களா என்றால் நான் போன பிறகு தான் அவர்கள் வந்தார்கள். எனது அண்ணன் மகன் செந்தில்குமார் சம்பவம் நடந்த அன்றே காவல்நிலையத்திற்கு சென்று புகார் அளித்தார் என்றால் சரிதான். எனது அண்ணன் மகன் செந்தில்குமார் காவல்நிலையத்தில் சம்பவ தினத்தன்று புகார் கொடுத்துவிட்டு மதியம் 01.00 மணியளவில் நான்குநேரி மருத்துவமனைக்கு வந்தார். மருத்துவமனைக்கு வந்து

என்னிடம் புகார் அளித்த விவரத்தை தெரிவித்தார் என்றார் சரிதான்.

1ம் எதிரி என் மீது புகார் கொடுத்த விவரம் மருத்துவமனையில் இருந்த போது யார் சொல்லி தெரியும் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. வழக்கு சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து காவல்துறையினர் என்னை சந்தித்து புகார் பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். செந்தில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் விசாரிக்க வந்ததாக தெரிவித்தார்கள். போலீசார் வரும் போது காலை 10.00 மணி இருக்கும்.

போலீசார் மருத்துவமனையில் விசாரித்த பிறகு என்னை விசாரிக்கவில்லை என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த பேப்பரில் உள்ள விவரம் உங்களுக்கு தெரியாது என்றால் நான் சொல்ல சொல்ல தான் போலீசார் எழுதினார்கள். எனக்கு எதிரிகள் தாக்கியதால் உடம்பு முழுவதும் வீக்க காயம் இருந்தது என்றால் சரிதான். நான் மருத்துவமனையில் முதல் உதவி சிகிச்சை செய்யும் போது என்னுடைய காயங்களை மருத்துவர் குறித்து கொண்டார் என்றால் சரிதான். எனக்க ஊமகாயம் தான் இருந்தது, ரத்த காயம் இல்லை. சுடலை கோவில் திருவிழாவிற்கு தான் எதிரிகள் பந்தல் போட்டார்கள் என்றால் சரிதான்.

பந்தலை செண்பகராமநல்லூரில் இருந்து வந்து போட்டார்கள். அது வாடகை பந்தல். வழக்கு சம்பவத்தின் போது பந்தல் போடும் நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் திருநெல்வேலி மருத்துவமனைக்கு பிற்பகல் 03.00 மணிக்கு சென்றேன். வழக்கு சம்பவ தினத்தன்று எதிரி என் மீதும் என் தம்பி மீதும் கொடுத்த புகார் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவ இடத்தின் அருகாமையில் இருந்த குடியிருப்பில் இருந்தவர்கள் சம்பவத்தை பார்த்தார்கள்.

வழக்கு சம்பவமானது என் வீட்டு முன்பாக தான் நடந்தது. நான் சொல்வது போல் எதிரிகள் என்னை தாக்கி அவதூறான வார்த்தைகளால் பேசி கொலை மிரட்டல் சம்பவம் நடக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 07.06.2017 ம் தேதி காலை 11.00 மணிக்கு என் மீதும் என் தம்பி மீதும் வழக்கு பதிவு செய்யபட்ட விவரம் அறிந்து பந்தல் பிரித்து போடும் போது நடைபெற்ற பிரச்சனையின் போது தன்னிச்சையாக ஏற்பட்ட காயத்தை வைத்து எதிரிகள் தாக்கியதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

07.06.2017 காலை 10.30 மணிக்கு நானும் என் சகோதரர் ராமசுப்பிரமணியனும் சேர்ந்து எதிரி வீட்டின் முன்பாக போய் பந்தல் போடகூடாது என்று தகராறு செய்து அவர்களை அடித்து காயம் ஏற்படுத்தி கொலை மிரட்டில் செய்தீர்கள் என்று சொன்னால் சரியல்ல, அது பொய். எதிரி கொடுத்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக

மூலைக்கரைபட்டியில் கடை வைத்துள்ள செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகள் கொடுத்த வழக்கின் மீது நடவடிக்கை எடுக்காமல் தடுத்து வைத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.